R. KAMALAKKANNAN
MINISTER FOR Agriculture, Electricity,
Education including Collegiate Education,
DRDA, Community Development,
Fire Services and Sainik Welfare
GOVERNMENT OF PUDUCHERRY

PUDUCHERRY

Date : 1 SEP 2020

## ஆசிரியர் தின வாழ்த்து

ஒரு நல்ல ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பிப்பதோடு கற்றுக்கொள்ளவும் வழிகாட்டுவார்கள். அதாவது வகுப்பறையில் இருந்து மட்டும் கற்றுக் கொள்ளாமல், சுற்றுப்புறங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்கித் தருபவர்களாய் அமைவார்கள்.

'கலை பயில தெளிவு கட்டுரை வன்மை' மிக்கவர்களே சிறந்த ஆசிரியர்களாக இருக்க முடியும். இவ்வரிக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர் முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன். அவரது பிறந்த நாளாம் செப்டம்பர் 5ஆம் நாளே ஆசிரியர் தினமாக நான் கொண்டாடி வருகிறோம்.

*'பள்ளமான இடத்தினைப் பார்த்துப் பாயும் வெள்ளம் நல்ல நல்ல
நூல்களை நாடிப் பயில்பவர்கள் ஆசிரியர்கள்'*

படிப்பதோடு படித்ததை எடுத்துக்கூறும் வல்லமை பெற்ற ஆசிரியர்களால்தான் ஒரு மாணவனை நல்ல அறிஞனாக, அறிவில் சிறந்தவனாக, ஆற்றல் மிகுந்தவனாக, பண்பின் உறைவிடமாக உருவாக்க முடியும்.

அறிவுலகின் வீதியிலே அழைத்துச் சென்று அலைகடலின் ஆழம்போல் பாடம் சொல்லி தரமான கல்வி வழங்கும் ஆசிரியர்களை உள்ளம் மகிழ வாழ்த்துகிறேன். அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க வேண்டும் என்று நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கின்றேன்.

(இரா. கமலக்கண்ணன்)

✆ Off. : 0413-2220604, 2232255, 2232258, (Per.) *Tele-Fax.* : 0413-2335014